# இஸ்லாமிய மார்க்கத்தில்

# சுன்னாவின்

# அந்தஸ்து

ஆசிரியர் :
ஷேக் முஹம்மத் நாஸிருத்தீன் அல்பானி

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட எங்கள் நபி முஹம்மத் அவர்கள் மீதும் அன்னாரின் உறவினர், உத்தம தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக !

சிறந்த ஹதீஸ்கலை வல்லுநரும் மாமேதையுமான ஷேக் நாஸிருத்தீன் அல்பானி(ரஹ்) அவர்கள் எழுதிய இஸ்லாமிய மார்க்கத்தில் சுன்னாவின் அந்தஸ்து எனும் நூலை தமிழாக்கம் செய்து அஸ்ஹாபுல் ஹதீஸ் பதிப்பகத்தின் முதல் நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். தமிழக முஸ்லிகளுக்கு தேவையான இது போன்ற பயனுள்ள பல நூல்களை இன்ஷா அல்லாஹ் அஸ்ஹாபுல் ஹதீஸ் பதிப்பகத்தின் சார்பாக தொடர்ந்து வெளியிட உள்ளோம்.

இந்நூலை தமிழாக்கம் செய்த மௌலவி ஹுசைன் உமரி மற்றும் ஹசன் அலி உமரி அவர்களுக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக.

முஸ்லிம் சகோதர, சகோதரிகள் எங்களின் பதிப்பக நூல்களுக்கு தங்களின் நல் ஆதரவினை அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வஸ்ஸலாம்

அன்புடன்

**ஜபியுல்லாஹ்**

அஸ்ஹாபுல் ஹதீஸ் பதிப்பகம்.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட எங்கள் நபி முஹம்மத்(S) அவர்கள் மீதும் அன்னாரின் உறவினர், உத்தம தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக !

அவர்கள் மீதும் அன்னாரின் உறவினர், உத்தம தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக !

மாபெரும் மேதையும், ஹதீஸ்கலை வல்லுநருமான ஷேக் நாஸிருத்தீன் அல்பானி அவர்கள் தன்னுடைய வாழ்க்கையையே ஹதீஸ் துறைக்காக அர்ப்பணித்தவர்கள். ஹதீஸ்களின் முக்கியத்தும் தொடர்பாக ஒரு நூலை அவர்கள் எழுதியிருக்கின்றார்கள் என்றால் நிச்சயமாக அந்த நூல் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கும். ஆகவே தான் கல்வியாளர்களிடத்தில் இன்றளவிற்கும் இந்நூலுக்கு வரவேற்பு உள்ளது. இந்நூலை தமிழ்மொழியிலும் கொண்டு வரவேண்டும் என்ற ஆவலுடன் இதனை மொழிபெயர்த்துள்ளோம். இந்நூல் ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைகளில் ஒன்றான ஹதீஸ்களின் முக்கியத்துவத்தை அறிவதற்கு இந்நூலாசிரியர் குர்ஆனின் சில வசனங்களை மேற்கோள் காட்டி ஹதீஸ்களின் துணையின்றி அவ்வசனங்களை விளங்கவே முடியாது என்பதினை மிக அழகாகவும், ஆழமாகவும் விளக்கியிருக்கிறார்கள். அரபி மொழியில் பண்டிதனாகவே இருந்தாலும் ஹதீஸ்களின் துணையின்றி குர்ஆன் வசனங்களை விளங்க முடியாது என்பதை ஆணித்தரமாக நிருபித்திருக்கிறார்கள். இன்னும் குர்ஆன் சுன்னாவை வேறுபடுத்தி பார்க்காமல் அவை இரண்டையும் ஒன்றாக இணைத்தே ஆதாரங்களை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

குர்ஆன் மற்றும் சுன்னாவற்கு மத்தியில் பாகுபாடு காட்டியதினாலேயே குர்ஆன் மட்டுமே போதும் என்ற வழிகெட்ட கூட்டமும், குர்ஆன் மற்றும் அறிவிற்கு முரண்படும் ஸஹீஹான ஹதீஸ்களை மறுக்க வேண்டும் என்ற அறியாமையில் இருக்கின்ற கூட்டமும் உருவாகின. (அல்லாஹ் நம்மை காப்பானாக.)

குர்ஆன் சுன்னா இவ்விரண்டையும் பின்பற்றுவதின் மூலமே ஒருவனால் நேர்வழியை அடைய முடியும். இவற்றில் ஏதேனும் ஒன்றை மறுத்துவிட்டாலும் அவன் வழி தவறிவிடுவான். இதனையே நபி(S) அவர்கள் உயர்ந்த சொல்நயத்துடன் கூறியிருக்கின்றார்கள்.

நான் உங்களிடையே இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பற்றிப்பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள். (அவை) அல்லாஹ்வுடைய வேதம் மற்றும் என்னுடைய சுன்னத்தாகும்.

இறுதியாக இந்நூலின் மொழிபெயர்ப்பினை மூல நூலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தந்த பன்னூலாசிரியர் மௌலவி யூசுஃப் மிஸ்பாஹீ அவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. மேலும் இந்நூல் வெளிவருவதற்கு உதவிகள் புரிந்த அனைத்து சகோதரர்களுக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக!

அன்புடன்

**H. ஹசன் அலி உமரி**

## முன்னுரை

இது, கத்ரு நாட்டின் தலைநகரம் தவ்ஹாவில் ஹிஜ்ரி 1392ஆம் ஆண்டு ரமளான் மாதத்தில் நான் ஆற்றிய உரையாகும். அதில் பயனுள்ள பல தகவல்கள் மற்றும் கருத்துகள் முஸ்லிம்களுக்கு தேவையாக இருப்பதினால் அதனை நூல் வடிவில் கொண்டு வருமாறு சில சகோதரர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று நான் இதனுடைய பயனை பரவலாக்கவும், அறிவுரைகளை நினைவூட்டிடவும் இதனை நூல் வடிவில் வெளியிடுகிறேன். இதில் நான் சில தலைப்புகளை ஏற்படுத்தி யிருக்கிறேன். அத்தலைப்புகள் மையக் கருத்தை உள்ளடக்கிய தாகவும், நூலினை வாசிப்போருக்கு எளிதாக விளங்கிடவும் உதவியாக இருக்கும்.

கண்ணியமிக்க அல்லாஹ் என்னை அவனது மார்க்கத்தின் மீதான களங்கத்தை தடுத்து நிறுத்துபவனாகவும், அவனது ஷரீஅத்தின் உதவியாளனாகவும் பதிவு செய்வானாக. மேலும் இந்த மார்க்கத்தில் அவன் என்னை உறுதியாக இருக்கச் செய்வானாக. நிச்சயமாக அவன் கண்ணியமிக்கவன், (உதவிகள்) கேட்கப்படக்கூடியவன்.

**முஹர்ரம், 22 – ஹிஜ்ரி, 1394**
**டமாஸ்கஸ்**

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவனையே புகழ்கிறோம், அவனிடமே உதவி தேடுகிறோம். அவனிடமே பிழை பொறுக்க வேண்டுகிறோம். நமது நஃப்ஸின் தீங்குகளை விட்டும், நமது அமல்களில் ஏற்படும் கெடுதிகளை விட்டும் அல்லாஹ்விடமே பாதுகாவல் தேடுகிறோம். எவரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகிறானோ அவனை வழிகெடுப்பவன் யாருமில்லை. மேலும் எவரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டு விடுகிறானோ அவனை நேர்வழிபடுத்துபவன் யாருமில்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன் அவனுக்கு இணையில்லை, முஹம்மத்(S) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும் ஆவார்கள் என நான் சாட்சி கூறுகிறேன்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ اتَّقُواْ اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوتُنَّ إِلاَّ وَأَنتُم مُّسْلِمُون

( آل عمران:١٠٢)

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் முஸ்லிம்களாகவே அன்றி மரணித்து விட வேண்டாம். (3:102)

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُواْ رَبَّكُمُ الَّذِي خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا
زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالاً كَثِيراً وَنِسَاء وَاتَّقُواْ اللّهَ الَّذِي تَسَاءلُونَ بِهِ
وَالأَرْحَامَ إِنَّ اللّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا (النساء: ١)

மனிதர்களே ! உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனை அஞ்சிக் கொள்ளுங்கள் அவன் அதிலிருந்து அதன் துணைவியைப் படைத்து, அவையிரண்டிலிருந்தும் அதிகமான

ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான். எவனைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும் மேலும், இரத்த உறவுகளைத் துண்டித்து நடப்பதை) அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கின்றான் (4:1)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلاً سَدِيداً يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَن يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزاً عَظِيماً

(الأحزاب:٧٠,٧١)

நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள் ! இன்னும் நேர்மையான வார்த்தையையே கூறுங்கள். (அவ்வாறு செய்தால்) உங்கள் செயல்களை உங்களுக்கு அவன் சீராக்குவான். மேலும், உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான். யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுகின்றாரோ நிச்சயமாக அவர் மகத்தான வெற்றியை ஈட்டிக்கொண்டார். (33:70,71)

நிச்சயமாக வார்த்தைகளில் உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் சிறந்தது முஹம்மத்(S) அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் கெட்டது புதிதாக உருவாக்கப்படுபவையே புதியவைகள் அனைத்தும் பித்அத் ஆகும், பித்அத்துகள் அனைத்தும் வழிகேடாகும், வழிகேடுகள் அனைத்தும் நரகில் கொண்டுப் போய் சேர்க்கும்.

கண்ணயமிக்க அறிஞர்களும், சிறப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களும் நிறைந்துள்ள இச்சபையில் இவர்கள் அனைவரும் அறியாத ஒரு செய்தியை என்னால் கொண்டு வர முடியாது. நிச்சயமாக எனது கூற்று சரியாக இருந்தாலும், அல்லாஹ்வின் கூற்றை



பின்பற்றியவனாக இதனை நான் ஒரு அறிவுரையாக ஆக்கிக் கொள்கிறேன்.

وَذَكِّرْ فَإِنَّ الذِّكْرَى تَنفَعُ الْمُؤْمِنِينَ (الذاريات:٥٥)

இன்னும் நீர் உபதேசம் செய்வீராக ! ஏனெனில், நிச்சயமாக அவ்வுபதேசம் நம்பிக்கையாளர்களுக்குப் பயனளிக்கும் (51:55)

புனிதமிக்க ரமளான் மாதத்தின் அருள்வளமிக்க இரவுகளில் ஒன்றான இந்த இரவில் என்னுடைய உரை ரமளானுடைய சிறப்புகள், அதன் சட்டத்திட்டங்கள் அதனுடைய இரவுகளில் நின்று வணங்குவதின் சிறப்புகள் போன்றவை குறித்து இருக்காது. பெரும்பாலும் சொற்பொழிவாளர்கள், மக்களுக்கு நேர் வழிகாட்டுபவர்கள் இந்த மாதத்தில் நோன்பாளிக்குப் பயனளிக்கும் மற்றும் நன்மை, அருள்வளம் ஏற்படும் செய்திகளையே கூறுவார்கள். ஆனால் நான் எனது உரையை மிகமுக்கியமான ஒரு செய்தியைப் பற்றிக் குறிப்பிடுவதற்காக தேர்ந்தெடுத்துள்ளேன். ஏனெனில் அது மார்க்கத்தின் அடிப்படைகளில் ஒரு அடிப்படையாகும். அதுவே இஸ்லாமிய மார்க்கத்தில் சுன்னாவின் முக்கியத்துவத்தைத் தெளிவுப் படுத்துவதாகும்.

## குர்ஆனுடன் சுன்னாவின் பிணைப்பு

முஹம்மத்(S) அவர்களை அல்லாஹ் நபியாக தேர்ந்தெடுத்து மகத்தான குர்ஆனை அவர்கள் மீது அருளினான், அதிலுள்ள செய்திகளை மக்களுக்குத் தெளிவாக விளக்கும்படியும் கட்டளையிட்டு ள்ளான் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அல்லாஹ் கூறுகிறான்.

وَأَنزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ
(النحل: ٤٤)

மனிதர்களுக்கு இறக்கப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுப்படுத்துவதற்காகவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் நாம் உமக்கு இவ்வேதத்தை இறக்கினோம் 16 :44

இவ்வசனத்தில் உள்ள தெளிவு என்பது இரண்டு வகையான தெளிவை உள்ளடக்கியுள்ளது.

முதல் வகை : குர்ஆனின் வார்த்தை மற்றும் வரிசையமைப்பை அல்லாஹ், நபி(S) அவர்களின் உள்ளத்தில் எவ்வாறு அருளினானோ அவற்றில் எதையும் மறைக்காமல் அப்படியே உம்மத்தவர்களிடத்தில் சேர்ப்பதாகும்.

அல்லாஹ் குர்ஆனில் கூறியது போல

يَا أَيُّهَا الرَّسُولُ بَلِّغْ مَا أُنزِلَ إِلَيْكَ مِن رَّبِّكَ (المائدة:٦٧)

தூதரே! உமது இரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்டதை எடுத்துரைப்பீராக (5:67)

இவ்வசனம் தொடர்பாக அன்னை ஆயிஷா அவர்கள் அறிவிக்கும் ஹதிஸ் வருமாறு,

عن مسروق عن عائشة قالت من حدثك أن محمد صلى الله عليه وسلم كتم شئيا مما انزل عليه فقد كذب والله يقول يَا أَيُّهَا الرَّسُولُ بَلِّغْ مَا أُنزِلَ إِلَيْكَ مِن رَّبِّكَ (البخارى)



ஆயிஷா அவர்கள் கூறியதாவது முஹம்மத்(S) அவர்கள் தன் மீது அருளப்பெற்றதிலிருந்து எதையும் மறைத்தார்கள் என்று உங்களிடம் யாரும் சொன்னால் அவர் பொய் சொல்லிவிட்டார். (ஏனெனில்) தூதரே உமது இரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்டதை எடுத்துரைப்பீராக (5:67) என்று அல்லாஹ் கூறுகிறான். (அறிவிப்பாளர் : மஸ்ரூக்(ரஹ்) நூல் : புகாரி ,4612 – முஸ்லிம், 7531

முஸ்லிமின் இன்னொரு அறிவிப்பில்

عن مسروق عن عائشة قالت ولو كان محمد صلى الله عليه وسلم كاتما شيئا مما انزل عليه لكتم هذه الأية وَإِذْ تَقُولُ لِلَّذِى أَنْعَمَ اللَّهُ عَلَيْهِ وَأَنْعَمْتَ عَلَيْهِ أَمْسِكْ عَلَيْكَ زَوْجَكَ وَاتَّقِ اللَّهَ وَتُخْفِى فِى نَفْسِكَ مَا اللَّهُ مُبْدِيهِ وَتَخْشَى النَّاسَ وَاللَّهُ أَحَقُّ أَن تَخْشَاهُ (مسلم)

ஆயிஷா அவர்கள் கூறியதாவது அல்லாஹ்வின் தூதர்(S) அவர்கள் தன் மீது அருளப் பெற்றதிலிருந்து எதனையேனும் மறைப்பதாக இருந்தால் இவ்வசனத்தை மறைத்திருப்பார்கள். அந்த வசனம் பின்வருமாறு, எவர் மீது அல்லாஹ் அருள்புரிந்து நீரும் அவருக்கு பேருபகாரம் புரிந்தீரோ அவரிடம் நீர் உமது மனைவியை உம்மிடமே வைத்துக்கொள்வீராக. மேலும் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்வீராக என நீர் கூறியதை (எண்ணிப் பார்ப்பீராக) அல்லாஹ் வெளியாக்க இருந்ததை உமது மனதிற்குள் நீர் மறைத்து , மனிதர்களுக்கு நீர் அஞ்சுகிறீர். அல்லாஹ்வே நீர் அஞ்சுவதற்கு மிகத் தகுதியானவன்....(33:37) (அறிவிப்பாளர் : மஸ்ரூக் நூல் : முஸ்லிம்,288)

இரண்டாவது வகை : குர்ஆனிலுள்ள வார்த்தை மற்றும் வசனங்களின் பொருளை தம் சமூக மக்களுக்கு விளக்கி கூறுதல். இவை பெரும்பாலும் தெளிவற்ற பொதுவான மற்றும் எதையும் குறிப்பிட்டுக் கூறாத குர்ஆனிலுள்ள வசனங்களாகும்

சுன்னா (குர்ஆன் வசனத்திலுள்ள) தெளிவற்றதை தெளிவுப்படுத்தியும், பொதுவானவற்றை வரையுறுதியும், எது குறித்தும் குறிப்பிடாதவற்றை குறிப்பிட்டும் கூறுகிறது. இவை (அனைத்தும்) நபி(S) அவர்களின் சொல், செயல் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றின் மூலம் பெறப்படுகின்றன.

### குர்ஆனை விளங்க சுன்னாவின் அவசியம்

அல்லாஹ் கூறுகிறான்,

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوا أَيْدِيَهُمَا (المائدة:٣٨)

திருடனோ, திருடியோ அவ்விருவரின் கரங்களை வெட்டிவிடுங்கள் ...(5:38)

குர்ஆனை விளங்க சுன்னா அவசியம் என்பதற்கு இவ்வசனம் மிகச் சரியான உதாரணமாகும். திருடன் என்ற வார்த்தை கரம் என்ற வார்த்தையைப் போலவே இவ்வசனத்தில் எது குறித்தும் குறிப்பிடாமல் சொல்லப்பட்டுள்ளது.

சுன்னா, கால் தீனாரை திருடுபவனே திருடனாவான் என்று குறிப்பிட்டுக் கூறுகிறது.

நபி(S) அவர்கள் கூறினார்கள்,

عن عائشة قالت قال النبى صلى الله عليه وسلم تقطع اليد فى ربع دينار فصاعدا (البخارى ومسلم)



நபி(S) அவர்கள் கூறினார்கள் கால் தீனார் அல்லது அதற்கு மேல் (திருடினால் தான்) கை வெட்டப்படும்.

(புகாரி, 6789 – முஸ்லிம், 3479)

இவ்வாறே நபி(S) அவர்களின் நடைமுறை மற்றும் ஸஹாபாக்களின் நடைமுறைகள் திருடனின் கரத்தின் மணிக்கட்டு வரைத்தான் வெட்டினார்கள் என ஹதீஸ் நூல்களின் மூலம் அறியப்படுகிறது.

மேலும் தயம்மும் தொடர்பான குர்ஆன் வசனத்திலுள்ள கரம் எதுவரையிலானது என்பதை சுன்னாவே தெளிவுபடுத்துகிறது.

فَامْسَحُوا بِوُجُوهِكُمْ وَأَيْدِيكُمْ (النساء:٤٣)

(தூய்மையான மண்ணைத் தொட்டு) உங்கள் முகங்களிலும், உங்கள் கைகளிலும் தடவிக் கொள்ளுங்கள் ....(4:43-5:6)

عن عمار بن ياسر أن النبى صلى الله عليه وسلم التيمم ضربة للوجه والكفين (أحمد.والبخارى ومسلم)

நபி(S) அவர்கள் கூறினார்கள், தயம்மும் என்பது முகம் மற்றும் இரு மணிக்கட்டு வரை (மஸஹ் செய்வதற்காக மண்ணில்) தட்டுவதாகும். (அறிவிப்பாளர் : அம்மார் பின் யாஸிர், நூல், அஹ்மத், 18814 – புகாரி 347 முஸ்லிம், 603)

வேறு சில வசனங்கயையும் உங்கள் முன் வைக்கின்றேன். அவற்றில் அல்லாஹ் என்ன கூறியுள்ளான் என்பதை சுன்னாவின் வழிகாட்டலின்றி புரிந்துகொள்வது சாத்தியமற்றதாகும்.

الَّذِينَ آمَنُواْ وَلَمْ يَلْبِسُواْ إِيمَانَهُم بِظُلْمٍ أُوْلَـئِكَ لَهُمُ الأَمْنُ وَهُم مُّهْتَدُونَ

(الأنعام:٨٢)

1-யார் நம்பிக்கை கொண்டு, தங்களது நம்பிக்கையை அநியாயத்துடன் கலக்கவில்லையோ அவர்களுக்கே பாதுகாப்பு உண்டு அவர்கள் தாம் நேர் வழி பெற்றோராவர் (6:82)

இந்த வசனத்திலுள்ள அநீதி என்பதை நபித்தோழர்கள் பொதுவான ஒரு சொல்லாகவே விளங்கிக் கொண்டனர். சிறிய, பெரிய என அனைத்து அநீதிகளையும் உள்ளடக்கிய இவ்வசனம்யுள்ளதாகக் கருதிய அவர்களுக்கு கடினமாக இருந்தது.

عن عبد الله رضي الله عنه قال لما نزلت هذه الأية الَّذِينَ آمَنُواْ وَلَمْ يَلْبِسُواْ إِيمَانَهُم بِظُلْمٍ شق ذلك على أصحاب رسول الله صلى الله عليه وسلم وقالوا أينا لم يلبس إيمانه بظلم فقال رسول الله صلى الله عليه وسلم إنه ليس بذاك الا تسمع إلى قول لقمان لإبنه إن الشرك لظلم عظيم (البخارى)

(எவர்கள் நம்பிக்கை கொண்டு, தங்களது நம்பிக்கையை அநியாயத்துடன் கலக்கவில்லையோ ) என்ற வசனம் இறங்கிய போது அது அல்லாஹ்வின் தூதர் அவர்களின் தோழர்களுக்குக் கடினமாக தெரிந்தது ஆகவே அவர்கள் எங்களில் எவர்தாம் தம் இறைநம்பிக்கையுடன் அநீதியைக் கலந்து விடாமல் இருக்கின்றார், எனக் கேட்டார்கள் அதற்கு நபி அவர்கள் அது அப்படியல்ல (இங்கு



அநீதி என்பது ஷிர்க் ஆகும்) நீங்கள் லுக்மான் அவர்களின் நிச்சயமாக ஷிர்க் மாபெரும் அநியாயமாகம் என்ற கூற்றை செவியுறவில்லையா எனக் கேட்டார்கள். (அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் மஸ் ஊத், நூல் – புகாரி, 4776)

وَإِذَا ضَرَبْتُمْ فِي الأَرْضِ فَلَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ أَن تَقْصُرُواْ مِنَ الصَّلاَةِ إِنْ خِفْتُمْ أَن يَفْتِنَكُمُ الَّذِينَ كَفَرُوا (النساء:١٠١)

2-நீங்கள் பூமியில் பயணிக்கும் போது நிராகரித்தோர் உங்களைத் தாக்குவார்கள் என அஞ்சினால் தொழுகையை நீங்கள் சுருக்கிக் கொள்வதில் உங்கள் மீது குற்றம் இல்லை (4:101)

இவ்வசனத்தை மேலோட்டமாகப் பார்க்கும்போது பயணத்தின் போது தொழுகையை சுருக்கலாம் என்பது அச்சநிலை என்ற நிபந்தனை இருக்கும்போது தான் என்று அறியலாம். ஆகவே தான் ஸஹாபாக்களில் சிலர் இது குறித்து அல்லாஹ்வின் தூதரே அச்சமற்ற நிலையில் தொழுகையை குறைத்துத் தொழ நமக்கு என்ன நேர்ந்தது எனக் கேட்டார்கள்.

فقال رسول الله صلى الله عليه وسلم صدقة تصدق الله بها عليكم فاقبلوا صدقته (مسلم)

(அதற்கு) நபி(S) அவர்கள் இது அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய சலுகை (கொடை) ஆகும். எனவே அவன் வழங்கிய சலுகையை ஏற்றுக் கொள்ளுங்கள். என்று கூறினார்கள் (நூல் : முஸ்லிம் – 1222)

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالْدَّمُ وَلَحْمُ الْخِنْزِيرِ وَمَا أُهِلَّ لِغَيْرِ اللّهِ بِهِ ..... (المائدة:٣)

3-தானாக செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாதோருக்கு அறுக்கப்பட்டவையும் உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளன....(5:3)

இறந்து போனவற்றில் வெட்டுக்கிளி, மீன் ஆகியவையும் (உறைந்த) இரத்த வகைகளில் இதயம், ஈரல் ஆகியவையும் ஹலால் என சுன்னாவில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

عن عبد الله بن عمر أنه قال أُحلت لنا ميتتان و دمان الجراد والحيتان و الكبد و الطحال (البيهقى)

அப்துல்லாஹ் பின் உமர்(RA) அவர்கள் கூறினார்கள், நமக்காக இரண்டு இறந்த உயிரினங்களும் இரண்டு இரத்த வகைகளும் ஹலால் ஆக்கப்பட்டுள்ளன. அவை வெட்டுக்கிளி, மீன் மற்றும் இதயம் ஈரல் (நூல்: பைஹகி, 1241)

இந்த ஹதீஸை இமாம் பைஹகீ மற்றும் வேறு சில ஹதீஸ் கலை இமாம்கள் மர்ஃபூ தரத்திலும் மவ்கூஃப் தரத்திலும் பதிவு செய்துள்ளனர். மவ்கூஃப் அறிவிப்பு ஸஹீஹ் எனும் தரத்தில் அமைந்துள்ளது இருப்பினும் அந்த மவ்கூஃப் அறிவிப்பு மர்ஃபூ சட்டத்தில் உள்ளதாகும். ஏனெனில் ஸஹாபி இதனை தனது சுய கருத்தாகக் கூறியிருக்க முடியாது.

قُل لَّآ أَجِدُ فِى مَا أُوحِىَ إِلَىَّ مُحَرَّماً عَلَى طَاعِمٍ يَطْعَمُهُ إِلَّآ أَن يَكُونَ مَيْتَةً أَوْ دَماً مَّسْفُوحاً أَوْ لَحْمَ خِنزِيرٍ فَإِنَّهُ رِجْسٌ أَوْ فِسْقاً أُهِلَّ لِغَيْرِ اللَّهِ بِهِ (الأنعام: ١٤٥)



4- தானாகச் செத்தது, ஓட்டப்பட்ட இரத்தம், அசுத்தமாகவே உள்ள பன்றியின் மாமிசம், அல்லாஹ் அல்லாதோருக்காக அறுக்கப்பட்ட பாவமானது தவிர வேறெதுவும் உண்பவர் மீது அதை உண்பதற்குத் தடை செய்யப்பட்டதாக எனக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றில் நான் காணவில்லை என்று (நபியே) நீர் கூறுவீராக ! (6:145)

இந்த வசனத்தில் குறிப்பிடாத இன்னும் சிலவற்றை சுன்னா ஹராமெனக் கூறுகிறது.

عن إبن عباس قال نهى النبي صلى الله عليه وسلم عن كل ذي ناب من السباع وعن كل ذي مخلب من الطير(مسلم)

அல்லாஹ்வின் தூதர்(S) அவர்கள், கோரைப் பற்கள் கொண்ட ஒவ்வொரு வனவிலங்கையும், கூறிய நகங்களைக் கொண்ட ஒவ்வொரு பறவையையும் (உண்பதற்கு) தடை செய்துள்ளார்கள். (அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் நூல் : முஸ்லிம் – 3914)

இதைப் போன்றே வேறு சில ஹதீஸ்களில் ஹராமாக்கப்பட்டவை பற்றிய விபரம் வந்துள்ளது.

فأمر مناديا فنادى في الناس إن الله ورسوله ينهيانكم عن لحوم الحمر الأهلية فإنها رجس (البخارى)

அல்லாஹ்வின் தூதர்(S) அவர்கள் அறிவிப்பு செய்யும் ஒருவருக்கு பின்வருமாறு (அறிவிப்பு செய்ய) கட்டளையிட்டார்கள். அவர் மக்களிடையே அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களுக்கு நாட்டுக் கழுதைகளின் இறைச்சியை (உண்ண வேண்டாமென) தடை செய்துள்ளார்கள். ஏனெனில் அவை அசுத்தமானவையாகும் என

அறிவிப்புச் செய்தார். ( அறிவிப்பாளர் அனஸ் பின் மாலிக்(RA) நூல் புகாரி 5528 – முஸ்லிம், 3933)

5 அல்லாஹ் கூறுகிறான்

قُلْ مَنْ حَرَّمَ زِينَةَ اللَّهِ الَّتِى أَخْرَجَ لِعِبَادِهِ وَالْطَّيِّبَاتِ مِنَ الرِّزْق

(الأعراف:٣٢)

அல்லாஹ் தனது அடியார்களுக்கு வெளிப்படுத்திய அவனது அலங்காரத்தையும், உணவில் பரிசுத்தமானவற்றையும் தடை செய்பவன் யார்? என்று (நபியே) நீர் கேட்பீராக ! (7:32)

அலங்காரங்களில் ஹராமாக்கப்பட்டவை பற்றிய விபரம் சுன்னாவில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

عن على بن أبى طالب يقول أخذ رسول الله صلى الله عليه وسلم حريرا بشماله وذهبا بيمينه ثم رفع بهما يديه فقال إن هذين حرام على ذكور أُمتي حل لإناثهم (أبو داؤد وإبن ماجه)

நபி(S) அவர்கள் தமது இடதுகையில் பட்டுத்துணியையும் வலதுகையில் தங்கத்தையும் பிடித்துக் கொண்டு அவை இரண்டையும் உயர்த்தியவாறு கூறினார்கள், இவ்விரண்டும் எனது சமுதாயத்தின் ஆண்களுக்கு ஹராமாகும். என் சமுதாயப் பெண்களுக்கு ஹலாலாகும். (அறிவிப்பாளர் : அலி(RA) நூல் : அபூதாவூத், 4059 இப்னுமாஜா, 3726)

இதே கருத்தில் உள்ள பிரபலமான பல ஹதீஸ்கள் புகாரி, முஸ்லிம்



மற்றும் சில ஹதீஸ் நூல்களில் வந்துள்ளன. இன்னும் இதைப் போன்ற பல உதாரணங்கள் ஹதீஸ் மற்றும் பிக்ஹ் கலை அறிஞர்களிடத்தில் அறியப்பட்டவையாக உள்ளன.

சகோதரர்களே ! இதுவரை பார்த்ததில் இஸ்லாமிய மார்க்கத்தில் சுன்னாவின் முக்கியத்துவம் என்ன என்பதை நாம் அறிந்திருப்போம். இன்னும் இங்கே குறப்பிடப்படாத உதாரணங்களை தவிர்த்துவிட்டு மேலே கூறப்பட்ட உதாரணங்களை மட்டுமே கவனித்தாலும், சுன்னாவின் துணையின்றி குர்ஆனை சரியாக விளங்கிக் கொள்ளவே முடியாது என்பதினை உறுதியாக அறியலாம்.

முதல் உதாரணத்தில் (6 :82) வசனத்திலுள்ள அநீதி என்பதை, ஸஹாபா பெருமக்கள் மேலோட்டமாகவே விளங்கிக் கொண்டனர். இத்தனைக்கும் அவர்கள் அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்டவர்கள். அவர்களைப் பற்றி இப்னு மஸ்வூத் (RA) அவர்கள் பின் வருமாறு கூறினார்கள், ஸஹாபாக்கள் இந்த சமுதாயத்திலேயே மிகவும் தூய்மையான உள்ளமுடையவர்கள், மிகவும் ஆழ்ந்த ஞானமுடையவர்கள் மிகவும் குறைவாகவே (வீண்) சிரமத்தை நாடுபவர்கள். இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருந்தும் கூட அந்த மக்கள் இந்த வசனத்தைத் தவறாகவே விளங்கிக் கொண்டனர். நபி(S) அவர்கள் ஸஹாபாக்களின் தவறை சுட்டிக்காட்டாமலும் அநீதி என்பது ஷிர்க்கைத் தான் குறிக்கும் என்பதை குறிப்பிடாமலும் இருந்திருந்தால் நாமும் ஸஹாபாக்களைப் போன்று தவறாகவே விளங்கியிருப்போம். ஆனால் அல்லாஹ் நபி அவர்களின் வழிகாட்டல் மற்றும் சுன்னாவின் அருளினால் நம்மைப் பாதுகாத்தான்.

இரண்டாவது உதாரணத்தில் கஸ்ர் பற்றிய அந்த ஹதீஸ், மற்றும் நபி(S) அவர்கள் பயணங்களில் அச்சமற்ற நிலையிலும் தொழுகையை கஸ்ர் செய்திருக்கின்றனர் என்ற ஹதிஸும் இல்லாவிட்டால் பயணத்தில் அச்சமற்ற நிலையில் தொழுகையை கஸ்ர்

செய்வதில் நாம் சந்தேகத்திலேயே இருந்திருப்போம். ஏனெனில் (4 : 101) வசனத்தின் மேலோட்டமான சொற்பிரயோகம் மற்றும் ஸஹாபாக்களிடம் இது தொடர்பாக இருந்த சந்தேகம் பயணங்களில் தொழுகையை கஸ்ர் செய்வது அச்சநிலை என்ற நிபந்தனை இருக்கும்போது தான் என்று கூறுகிறது.

மூன்றாவது உதாரணத்தில் : நாம் குறிப்பிட்ட அந்த ஹதீஸ் (பைஹகீ) இல்லையென்றால் நமக்காக ஹலாலாக்கப்பட்ட தூய உணவுகளான வெட்டுக்கிளி, மீன் ஆகியவற்றை நாம் ஹராமாக்கியிருப்போம்.

நான்காவது உதாரணத்தில் : நாம் குறிப்பிட்டுள்ள ஹதீஸ்கள் இல்லையென்றால் அல்லாஹ் நபி(S) அவர்களின் நாவின் மூலம் நம் மீது ஹராமாக்கிய கோரைப் பற்களுடைய விலங்குகள் மற்றும் கூறிய நகங்களைக் கொண்ட பறவைகளை ஹலாலாக்கியிருப்போம்.

ஐந்தாவது உதாரணத்தில் : அந்த ஹதீஸ்கள் இல்லையென்றால் அல்லாஹ் தனது நபி(S) அவர்களின் நாவின் மூலம் ஹராமாக்கிய தங்கம் மற்றும் பட்டையும் நாம் ஹலாலாக்கியிருப்போம்.

(குர்ஆனை விளங்குவதற்கு சுன்னா மிகவும் அவசியம் வாய்ந்ததாக உள்ளது) ஆகவே தான்

قال بعض السلف :السنة تقضى على الكتاب

ஸலஃபுகளில் சிலர், சுன்னா குர்ஆனுக்கு தீர்ப்ப (விளக்கம்) ளிக்கக்கூடியதாக உள்ளது என்கின்றனர்.



## சுன்னாவைத் தவிர்த்து குர்ஆன் மட்டுமே போதும் என்போரின் வழிகேடு

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில் சில தஃப்ஸீர் மற்றும் தற்கால அறிஞர்களின் நூல்களில் இறுதியாக குறிப்பிடப்பட்ட இரண்டு உதாரணங்களான கோரைப் பற்களுடைய வனவிலங்குகள் மற்றும் தங்கம், பட்டு அணிவதை ஹலால் என்று எழுதியுள்ளனர். (காரணம்) இதற்கான தடை குர்ஆனில் இல்லை என்கின்றனர். தற்போது குர்ஆனை பின்பற்றுவோர் என்று தம்மை கூறிக் கொள்ளும் ஒரு கூட்டம் சுன்னாவை தவிர்த்து குர்ஆனுக்குத் தம்முடைய மன இச்சை மற்றும் அறிவிற்கு ஏற்றவாறு விளக்கம் கூறி வருகின்றனர். சுன்னா (ஹதீஸ்கள்) என்பவை இவர்களின் மன இச்சைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்,ஆகவே தான் மன இச்சைக்கு ஏற்றவாறு இருக்கும் ஹதீஸ்களை ஏற்கின்றனர். முரணாக இருக்கும் ஹதீஸ்களை மறுக்கின்றனர்.

இவர்களைப் பற்றிதான் நபி(S) அவர்கள் முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள்.

عن أبى رافع عن النبى صلى الله عليه وسلم قال لُألفين أحدكم متكئا
على أ ريكته يأتيه أمر مما أُمرت به أو نهيت عنه فيقول لا أدرى ما
وجدنا في كتاب الله اتّبعناه (أبو داؤد والترمذى وإبن ماجه)

நபி(S) அவர்கள் கூறினார்கள் உங்களில் ஒருவரையும் நான் இந்த நிலையில் பார்க்கக் கூடாது (அதாவது) அவன் தன்னுடைய ஆசனத்தின் மீது சாய்ந்து கொண்டிருப்பான். அப்போது நான் ஏவியுள்ள அல்லது தடுத்துள்ள காரியம் அவனிடம் வரும்போது அவன் கூறுவான், எங்களுக்கு தெரியாது நாங்கள் பின்பற்றுகின்ற

அல்லாஹ்வின் வேதத்தில் இதனைப் பார்க்கவில்லை ! (எனவே, நாங்கள் ஹதீஸைப் பின்பற்ற மாட்டோம் என்று கூறுவான்) (அறிப்பாளர் : அபூராஃபி(RA) நூல் : அபூதாவூத் - 3989, திர்மிதீ - 2875, இப்னுமாஜா-13)

வேறொரு அறிவிப்பில்

فيقول بيننا وبينكم كتاب الله عزوجل فماوجدنا فيه من حلال

استحللناه وما وجدنا فيه من حرام حرمناه. الا وإن ما حرم رسول الله

صلى الله عليه وسلم مثل ما حرم الله ( إبن ماجه)

அல்லாஹ்வின் தூதர்(S) கூறினார்கள் : (ஆசனத்தின் மீது சாய்ந்தவனாக அந்த மனிதன் கூறுவான்) எங்களுக்கும், உங்களுக்கும் மத்தியில் அல்லாஹ்வின் வேதம் மட்டுமே போதுமானதாகும். எனவே அவற்றில் எதனை ஹலால் எனக் காண்கிறோமோ அதனை மட்டுமே ஹலாலாக்கி கொள்வோம். எதனை ஹராம் எனக் காண்கிறோமோ அதனை மட்டுமே நாம் ஹராமாக்கி கொள்வோம். அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஒன்றை ஹராமாக்கினால்,அது அல்லாஹ்வே ஹராமாக்கியதை போன்றதாகும் (அறிபிப்பாளர் : மிக்தாம் பின் மஹதைகாரிப்(RA) நூல்: இப்னு மாஜா 12)

ألا إنى أُوتيت الكتاب ومثله معه (ابو داؤد)

நபி(S) அவர்கள் கூறினார்கள், அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக நான் குர்ஆனும், அதைப் போன்றதும் (ஹதீஸும்) சேர்த்தே வழங்கப்பட்டுள்ளேன். (அறிவிப்பாளர் : மிக்தாம் பின் மஹதைகாரிப்(RA) நூல் : அபூதாவுத்-4606)



இங்கு வேதனைக்குரிய விசயம் என்னவெனில் இஸ்லாமிய ஷரீஅத் மற்றும் அதன் கொள்கைகள் பற்றி எழுதும் எழுத்தாளர்களில் சிலர் தங்களுடைய நூல்களின் முன்னுரையில் தங்களின் கருத்துக்களுக்கு குர்ஆன் வசனங்களை மட்டுமே ஆதாரமாக குறிப்பிட்டு எழுதியுள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆதாரப்பூர்வமான ஹதீஸ், இஸ்லாமிய ஷரீஅத் குர்ஆனை மட்டும் கொண்டதல்ல மாறாக குர்ஆன், சுன்னா ஆகிய இரண்டையுமே கொண்டதாகும் என்பதினை ஆணித்தரமாக கூறுகிறது. இவை இரண்டில் ஏதேனும் ஒன்றை மட்டும் பின்பற்றுபவர் இரண்டையுமே பின்பற்றாதவர் ஆவார். ஏனெனில் இந்த இரண்டில் ஒவ்வொன்றும் மற்றொன்றை பின்பற்ற வேண்டுமென்று கட்டளை யிடுகிறது.

அல்லாஹ் கூறியது போல்.

مَّنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللّٰه (النساء : ٨٠)

யார் இத்தூதருக்குக் கட்டுப்படுகின்றாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு விட்டார். (4:80)

فَلاَ وَرَبِّكَ لاَ يُؤْمِنُونَ حَتَّىَ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لاَ يَجِدُواْ

فِيْ أَنفُسِهِمْ حَرَجاً مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُواْ تَسْلِيمًا (النساء : ٦٥)

(நபியே) உமது இரட்சகன் மீது சத்தியமாக, அவர்கள் தமக்கிடையில் ஏற்பட்ட சர்ச்சையில் உம்மை நீதிபதியாக்கி, பின்னர் நீர் வழங்கும் தீர்ப்பை தம் மனங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாது ஏற்று, அதற்கு முற்றிலும் கட்டுப்படும் வரை, நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள் (4:65)

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْراً أَن يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَن يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالاً مُّبِيناً (الأحزاب :٣٦)

அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தில் முடிவுசெய்து விட்டால் தமது காரியத்தில் சுய அபிப்ராயம் கொள்வதற்கு முஃமினான எந்த ஆணுக்கும் முஃமினான எந்தப் பெண்ணுக்கும் உரிமை இல்லை. எவன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்கின்றானோ நிச்சயாக அவன் மிகத் தெளிவான வழி கேட்டில் சென்றுவிட்டான் (33:36)

وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانتَهُوا وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ شَدِيْدُ الْعِقَاب (الحشر :٧)

இத்தூதர் உங்களுக்கு எதை வழங்கினாரோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், அவர் எதை உங்களுக்குத் தடுத்தாரோ (அதை விட்டும்) விலகிக் கொள்ளுங்கள் (59 :7)

இந்த வசனத்திலுள்ள (59:7) கருத்தை பிரதிபலிக்கும் வகையில் வந்துள்ள இப்னு மஸ்ஊத்(RA) அவர்களின் ஹதீஸ் என்னை வியப்படையச் செய்தது.

عن علقمة عن عبد الله قال لعن الله الواشمات والموتشمات والمتنمصات والمتفلجات للحسن المغيرات خلق الله فبلغ ذلك إمرأة من بني أسد يقال لها أُم يعقوب فجائت فقالت إنه بلغنى أنك لعنت



كيت وكيت فقال وما لي لا ألعن من لعن رسول الله صلى الله عليه وسلم ومن هو في كتاب الله فقالت لقد قرأتُ مابين اللوحين ما وجدتُ فيه ما تقول قال لئن كنت قرأته لقد وجدتيه أمّا قرأت (وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانتَهُوا)قالت بلى قال فانه قد نهى عنه (البخارى ومسلم)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(RA) அவர்கள் பச்சை குத்திவிடும் பெண்கள் பச்சை குத்திக்கொள்ளும் பெண்கள், முகத்தில் முளைத்திருக்கும் முடிகளை அகற்றக் கேட்டுக்கொள்ளும் பெண்கள், அழகிற்காக அரத்தால் தேய்த்து தம் முன் பற்களைப் பிரித்துக் கொள்ளம் பெண்கள் ஆக அல்லாஹ் தந்த உருவத்தை மாற்றிக் கொள்ள முயலும் பெண்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று கூறினார்கள். இந்தச் செய்தி பனூ அசத் குலத்தைச் சேர்ந்த உம்மு யஅகூப் எனும் ஒரு பெண்மணிக்கு எட்டியது. அந்தப் பெண் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(RA) அவர்களிடம் வந்து இப்படிப்பட்ட பெண்களை நீங்கள் சபித்துள்ளதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளதே என்றார். அதற்கு அப்பதுல்லாஹ் பின் மஸ்ஊத்(RA) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்(S) அவர்கள் யாரை சபித்தார்களோ அவர்களையும், அல்லாஹ்வின் வேதத்தில் சபிக்கப்பட்டுள்ள வர்களையும் நான் ஏன் சபிக்கக் கூடாது என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண் (குர்ஆனில்) இரு அட்டைகளுக்கிடையிலுள்ள அனைத்தையும் நான் ஓதியுள்ளேன் நீங்கள் குறிப்பிட்டதை நான் அதில் காணவில்லையே என்று கேட்டார். அதற்கு அவர்கள் நீ குர்ஆனை (சரியாக) ஓதியிருந்தால் அதில் நான் கூறியதை கண்டிருப்பாய். இத்தூதர் உங்களுக்கு எதை வழங்கினாரோ அதை

நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், அவர் எதை உங்களுக்குத் தடுத்தாரோ (அதை விட்டும்) விலகிக் கொள்ளுங்கள் (59:7) என்ற வசனத்தை நீ ஓதவில்லையா என்று கேட்டார்கள், அந்தப் பெண், ஆம் (ஓதினேன்) என பதிலளித்தார். அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(RA) அவர்கள் நபி(S) அவர்கள் (மேலே குறிப்பிட்ட) இவற்றைச் செய்ய வேண்டாமெனத் தடுத்துள்ளார்கள் என்று சொன்னார்கள் (புகாரி, 4886, 5934,5948 – முஸ்லிம், 4311).

## அரபிப்புலமையை கொண்டு குர்ஆனை விளங்கிட முடியாது.

அரபி மொழியையும் அதனுடைய இலக்கியத்தையும் நன்றாக அறிந்த அறிஞராக இருந்தாலும் சுன்னாவை தவிர்த்து விட்டு குர்ஆனை விளங்க முடியாது. ஒருவர் எவ்வளவுதான் அரப்பிப்புலமையைப் பெற்றிருந்தாலும் அவரால் ஸஹாபாக்களின் அரபிப்புலமையை மிகைத்திட இயலாது. ஏனெனில் அவர்களின் மொழியில் தான் குர்ஆன் அருளப்பட்டது. அவர்களின் (அரபி) மொழியில் அஜமி (பிற) மொழிகளின் தாக்கமோ, அரபிமொழியை கற்று பேசுபவர்களின் நடையோ மற்றும் தவறுகளோ ஏற்பட வாய்ப்பில்லை. இவ்வாறு இருந்தும் கூட முன்சென்ற ஒரு வசனத்தை அவர்களின் அரபிப்புலமையை கொண்டு அவர்களால் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆக யாரொருவர் சுன்னாவை (அதிகமாக) அறிந்து வைத்திருக்கின்றாரோ அவர் சுன்னாவை அறியாதவரை விட குர்ஆனை சரியாக விளங்கிடவும் அதிலிருந்து சட்டங்களைப் பெற்றிடவும் முடியும். இந்நிலையில் சுன்னாவை நிராகரிப்பவர் அதை ஆதாரமாக ஏற்காதவர் குர்ஆனை எவ்வாறு விளங்க முடியும்.?

ஆகவே தான் குர்ஆனுக்கு குர்ஆன் மற்றும் சுன்னாவை



கொண்டும் பின்னர் ஸஹாபாக்களின் கூற்றின் அடிப்படையிலும் விளக்கமளிக்க வேண்டும் என்பது மார்க்க அறிஞர்களிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதியாக உள்ளது.

இதன் மூலம் கடந்தகால மற்றும் நவீன கால அறிவுஜீவிகளின் வழிகேடு தெளிவாகின்றது. அவர்கள் ஸலஃபுகளின் பிக்ஹ் சட்டங்களுக்கு முரண்படுவதை தவிர்த்து விட்டு இங்கு அவர்களின் கொள்கை விளக்கங்களுக்கு முரண்படுவதை மட்டுமே பார்ப்போம். இதற்கான காரணம் அவர்கள் சுன்னாவை விட்டு வெகுதூரமாக இருப்பதும், அதுப்பற்றிய சரியான ஞானம் இல்லாததே ஆகும். மேலும் அல்லாஹ்வுடை தன்மைகள் மற்றும் பண்புகள் சார்ந்த வசனங்களுக்கு தம்முடைய மன இச்சை மற்றும் அறிவிற்கு ஏற்றவாறு விளக்கமளிக்கின்றனர்.

இத்தகையவர்களைப் பற்றி ஷரஹுல் அகீதத்து தஹாவிய்யாவில் கூறப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

குர்ஆன் சுன்னாவைப் பற்றிய ஞானம் இல்லாதவர் மார்க்கத்தின் அடிப்படை விஷயங்களை எவ்வாறு கூறமுடியும்? இந்த நிலையில் உள்ள ஒரு மனிதர் ஏதேனும் ஒன்றை கூறுவாரெனில் அது பிற நபர்களிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கும். அவர் அதனை அல்லாஹ்வின் வேதத்திலிருந்து பெறப்பட்டதாக கருதுகிறார். அவர் அல்லாஹ்வின் வேதத்திற்கு நபி அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்கள், ஸஹாபாக்கள் மற்றும் அவர்களை நல்ல முறையில் பின்பற்றியோர்களின் ஆதாரபூர்வமான கூற்றுகளை கொண்டு விளக்கமளிப்பதில்லை. ஸஹாபாக்கள் வெறும் குர்ஆனின் அமைப்பை மட்டும் பதிவு செய்யவில்லை, மாறாக குர்ஆனுடன் அதனுடைய விளக்கத்தையும் சேர்ந்தே பதிவு செய்துள்ளனர், மேலும் அவர்கள் குர்ஆனை குழந்தைகள் கற்றுக்கொள்வது போல்

அல்லாமல் குர்ஆனின் விளக்கத்தையும் சேர்த்தே கற்றறிருந் திருந்தனர்.

ஆகவே எவரொருவர் அவர்களின் பாதையில் செல்லவில்லையோ, அவர் தனது சுய அபிப்ராயத்தின்படியே விளக்கமளிப்பார். அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு சுய அபிப்ராயங்களின் அடிப்படையில் விளக்கமளிப்பவர் சில நேரங்களில் அவரின் சுய விளக்கம் சரியாக இருந்தாலும் அது அவருக்கு பாவமாகவே அமையும். அதே நேரத்தில் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் விளக்கமளிப்பவர் நன்மையை பெற்றுவிடுகிறார் அதில் அவர் தவறிழைத்தாலும் சரியே. ஆனால் அவருடைய விளக்கம் சரியாக இருந்துவிட்டால் அவருக்கு இரட்டிப்பான நன்மை கிடைத்துவிடும்.

ஷரஹுல் அகீதத்து தஹாவிய்யாவின் பக்கம் 217ல் நூலாசிரியர் மேலும் கூறுகிறார்.

அல்லாஹ்வின் தூதர்(S) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்படுவது அவர்களின் கட்டளைக்குக் கீழ்படிவது கட்டாயமாகும். அவர்களின் (சுன்னா) செய்திகளை அறிவிற்கு புறம்பானது சந்தேகத்திற்குரியது, மனிதர்களின் யூகங்களுக்கு முரணானது மற்றும் தன்னுடைய குறைவான அறிவுக்கு எதிரானது என்றில்லாமல் அதனை உண்மையாக நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்னும் நாம் எவ்வாறு வழிபாடுகளில், பணிவதில், திரும்புவதில் மற்றும் நம்பிக்கை கொள்வதில் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துகிறோமோ அவ்வாறே அல்லாஹ்வின் தூதர்(S) அவர்களின் தீர்ப்பை ஏற்பதில், கட்டுப்படுவதில், கீழ்படிவதில், செவிசாய்ப்பதில் நாம் அவர்களை ஒருமைப்படுத்த வேண்டும்.



ஆக இதன் சாராம்சம் என்னவெனில் குர்ஆன், சுன்னா இரண்டையும் ஆதாரமாக ஏற்பதிலும் ஷரீஅத் சட்டங்களை நிலைநிறுத்துவதிலும் அவற்றிற்கிடையே வேறுபாடு காட்டக் கூடாது என்பது அனைத்து முஸ்லிம்களின் மீது கடமையாகும். நிச்சயமாக இதில் வலப்பக்கம் இடப்பக்கம் என்று சாயாமலும், இதிலிருந்து பின்வாங்குவது என்ற வழிகேட்டில் செல்லாமலும் இருப்பது உங்கள் (முஸ்லிம்கள்) மீதுள்ள அமானிதமாகும். இதனையே நபி(S) அவர்கள் உயர்ந்த சொல் நயத்துடன் கூறியுள்ளார்கள்.

عن أبي هريرة رضى الله عنه قال قال رسول الله صلى الله عليه
وسلم :ا إني قد تركت فيكم شئين لن تضلوا بعدهما: كتاب الله وسنتي
ولن يتفرقا حتى يردا علي الحوض (المؤطأ والحاكم)

நான் உங்களிடையே இரண்டு விஷயங்களை விட்டு செல்கிறேன். அவற்றை நீங்கள் பற்றிப்பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள் (அவை) அல்லாஹ்வுடைய வேதம் மற்றும் என்னுடைய சுன்னத்தாகும். (கவ்ஸர்) தடாகத்தில் என்னிடம் வரும்வரை இவை இரண்டும் பிரியவே பிரியாது. (முஅத்தா, – ஹாகிம்).

## ஒரு முக்கிய எச்சரிக்கை

முன்பு சொல்லப்பட்ட விவரங்களை தொடர்ந்து ஒரு முக்கிய விஷயத்தை நான் கூறுகிறேன். நிச்சயமாக சுன்னாவிற்கு ஷரீஅத்தில் முக்கியத்துவம் என்பது ஹதீஸ் கலையின் சரியான அறிவிப்பாளர் தொடர் மற்றும் ஹதீஸ் கலை ஆய்வின் வழிமுறைக்குட்பட்ட நபி அவர்களின் சுன்னாவை குறிக்கும். இதுவல்லாது தஃப்ஸீர், பிக்ஹ்,

தர்கீப், தர்ஹீப், நற்பண்புகள், மற்றும் அறிவுரைகள் ஆகிய நூல்களிலுள்ள பலவீனமான நிராகரிக்கப்பட்ட முன்கர் மற்றும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை குறிக்காது, இன்னும் இவற்றில் உள்ள சில ஹதீஸ்களுக்கும் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் சம்பந்தமே யில்லை. உதாரணத்திற்கு ஹாரூத் மாரூத் பற்றிய ஹதீஸ் கரானிக் (பறவைகள்) பற்றிய கதை.

இந்த கரானிக் (பறவைகள்) பற்றிய ஹதீஸ் அசத்தியமானது என்பதை குறிப்பிட்டு நான் சிறிய புத்தகத்தை எழுதியுள்ளேன் அது பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தகைய ஹதீஸ்களின் பெயரால் உள்ள செய்திகளை பெருமளவில் திரட்டி என்னுடைய பெரிய நூலாகிய சில்சிலத்துல் அஹாதீஸ் ஜயீஃபத்தி வல் மவ்ஜூஅத்தி அஸ்ஸூஹா ஸய்யியி ஃபில் உம்மத்தி என்ற நூலில் பதிவு செய்துள்ளேன். அவற்றின் எண்ணிக்கை இதுவரையில் நான்காயிரம் ஹதிஸ்களை எட்டியுள்ளது. இவற்றில் ஜயீஃப் மற்றும் மவ்ஜுவ் ஹதீஸ்கள் உள்ளன. அவற்றில் ஐநூறு ஹதீஸ்கள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது.

அறிஞர் பெருமக்களின் மீது கடமை என்னவெனில் குறிப்பாக தம்முடைய மார்க்கத் தீர்ப்பையும், ஃபிக்ஹ் சட்டங்களையும் மக்களுக்குத் தெரியப்படுத்துபவர்கள் (அவர்கள் கூற விரும்பும்) ஹதீஸின் உண்மை நிலையை நன்கு அறிந்த பின்பே அதை ஆதாரமாகக் கூறவேண்டும். ஏனெனில் இவர்கள் எந்த ஃபிக்ஹ் நூல்களிலிருந்து ஆதாரங்களை எடுக்கின்றார்களோ அவற்றில் பெரும்பாலும் இட்டுக்கட்டப்பட்ட, முன்கரான (நிராகரிக்கப்பட்ட) மற்றும் அறிவிப்பாளர் தொடரே இல்லாத ஹதீஸ்கள் தான் உள்ளன. இதை மார்க்க அறிஞர்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றனர்.

எனது பார்வையில் நான் முக்கியம் எனக் கருதி ஃபிக்ஹ் நூல்களிலுள்ள பலவீனமான மற்றும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை



ஒன்று திரட்ட ஆரம்பித்துள்ளேன். அது ஃபிக்ஹ் சட்டங்களோடு தொடர்புடையவர்களுக்கு பெரும் பயனாக இருக்கும். அதற்கு அல் அஹாதீஸுஜ் ஜயிஃப்பது வல் மவ்ஜூஅத்து ஃபீ உம்முஹாதில் குத்துபில் ஃபிக்ஹிய்யா (மூல ஃபிக்ஹ் நூல்களிலுள்ள ஜயீஃப் மற்றும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள்) என்று பெயர் சூட்டியுள்ளேன்.

நான் குறிப்பாக கூறுவது பின்வரும் ஃபிக்ஹ் நூல்களைத்தான்

1. அல்ஹிதாயா – ஆசிரியர், ஆல்முர்கீனானி– ஹனஃபீ ஃபிக்ஹ் நூல்
2. அல்முதவ்வனா – ஆசிரியர், இப்னுல் காஸீம் – மாலிகி ஃபிக்ஹ் நூல்
3. ஷர்ஹூல் வஜீஸ் – ஆசிரியர், அர்ராஃபியி – ஷாஃபியீ ஃபிக்ஹ் நூல்
4. அல்முக்னீ – ஆசிரியர், இப்னு குதாமா – ஹம்பலி ஃபிக்ஹ் நூல்
5. பிதாயத்துல் முஜ்தஹித் – ஆசிரியர், இப்னு ருஷ்த் அல் உன்துலுஸீ – பல்வேறு ஃபிக்ஹ் நூல்களை ஒப்பாய்வு செய்து எழுதப்பட்ட நூல்.

ஆனால் இப்பணியை என்னால் முழுமைப்படுத்த முடியவில்லை. மேலும் நான் இதுவரையில் செய்த ஆய்வை குவைத்தின் அல்வாஉ இல் இஸ்லாமி எனும் பத்திரிக்கையின் சார்பாக வெளியிடுவதாக வாக்களித்திருந்தனர். ஆனால் பின்னர் அவர்கள் பிரசுரிக்கவில்லை என்பதை அறிந்து வருத்தமடைந்தேன்.

இப்போது என்னால் இப்பணியில் ஈடுபட முடியவில்லை என்றாலும்

வேறொரு சந்தர்ப்பத்தில் ஈடுபடுவேன் (இன்ஷா அல்லாஹ்). ஃபிக்ஹ் கலையில் ஈடுபட்டுள்ள சகோதர்களுக்கு நான் நுணுக்கமான கல்விமுறையை ஏற்படுத்திடப் போகிறேன். அது அவர்களுக்கு உதவியாகவும் ஹதீஸ்களின் தரத்தை அதன் மூல நூல்களோடு ஒப்பிட்டு அறிவதற்கான எளிய வழிமுறையாகவும் அவற்றின் தனிச்சிறப்புகளை தெளிவுப்படுத்திடவும், அவற்றின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த கூடியதாகவும் இருக்கும் (அல்லாஹ் போதுமானவன் அவன் எனக்கு கிருபை செய்வானாக)

சுய அபிப்ராயங்கள் பற்றிய முஆத்(RA) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள பலவீனமான ஹதீஸ் மற்றும் அவற்றில் நிராகரிக்கப்பட வேண்டிசெய்தி.

என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன் ஃபிக்ஹின் அடிப்படை நூல்களில் பெரும்பாலும் குறிப்பிடப்படும் பிரபலமான ஒரு ஹதீஸை இங்கு குழுமியுள்ள சகோதரர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். அது பலவீனமான அறிவிப்பாளர் தொடருடையது மற்றும் இதுவரை நாம் பார்த்த குர்ஆன், சுன்னா இரண்டையும் அறவே வேறுபடுத்தி பார்க்கக்கூடாது. அவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்தே ஆதாரங்களை பெற வேண்டும் என்ற கருத்திற்கு முற்றிலும் முரண்பட்ட செய்தியை கொண்டது. அதுவே முஆத. இன்னு ஜபல்(RA) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்.



عن معاذ بن جبل أن رسول الله صلى الله عليه وسلم كيف تقضى إذا
عرض لك قضاء , قال أقضى بكتاب الله قال فان لم تجد في كتاب
الله قال فبسنة رسول الله صلى الله عليه وسلم قال فان لم تجد في سنة
رسول الله صلى الله عليه وسلم ولا في كتاب الله .قال أجتهد فى رأي
ولا آلو. فضرب رسول الله صلى الله عليه وسلم صد ره فقال الحمد لله
الذى وفق رسول رسول الله لما يرضى رسول الله (ابو داؤد)

நபி(S) அவர்கள், முஆத்(RA) அவர்களை யமன் நாட்டிற்கு அனுப்பும் போது அவர்களிடம் எதைக் கொண்டு தீர்ப்பளிப்பீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் வேதத்தை கொண்டு என்று கூறினார்கள்.

நபி(S) அவர்கள் கூறினார்கள் அதில் (உமக்கு தேவையானதை) நீர் பெறவில்லை என்றால்? அதற்கு முஆத்(RA) அவர்கள், அல்லாஹ் வின் தூதருடைய சுன்னாவைக் கொண்டு என்றார்கள்.

நபி(S) அவர்கள் கூறினார்கள், (அதிலும்) நீர் பெறவில்லை என்றால்?

அதற்கு முஆத்(RA) அவர்கள் கூறினார்கள், என்னுடைய சுய ஆய்வின்படி (தீர்வு காண) முயல்வேன். அதில் சற்றும் கவனக் குறைவாக இருக்கமாட்டேன்.

நபி(S) அவர்கள் கூறினார்கள், புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவனே அவனது தூதர் விரும்பியதை அவனது தூதரின் தூதருக்கு

வழங்கினான். (அபூதாவூத் 3119 – திர்மிதி 1249)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் இருக்கும் பலவீனத்தை இங்கு நான் (விரிவாக) கூறுவது, சரியாகாது. ஏனெனில் இதற்கு முன் நான் அதனைத் தெளிவாக விளக்கியுள்ளேன். எனினும் ஹதீஸ் துறையின் அமீருல் முஃமினின் ஆகிய புகாரி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை முன்கர் (நிராகரிக்கப்பட வேண்டிது), என்று கூறி இருப்பதை குறிப்பிடுவது மட்டுமே இங்கு போதுமானதாகும் என்று நினைக்கிறேன். இனி அந்த முன்கர் ஹதீஸின் மத்தன செய்திலுள்ள அடிப்படை முரண்பாடுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தீர்ப்பளிப்பவர் மூன்று படித்தரங்களின் அடிப்படையில் தமது தீர்ப்பை அமைத்துகொள்ள வேண்டும் என்று முஆத் ‎ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் கூறுகிறது.

ஒரு பிரச்சனைக்கு சுய அபிப்ராயத்தின் அடிப்படையில் தீர்ப்பளிப்பது என்பது அது தொடர்பான தீர்வு சுன்னாவில் இல்லாத நிலையில்தான். அதுபோன்று சுன்னா அடிப்படையில் தீர்ப்பளிப்பதாக இருந்தால் அது தொடர்பான தீர்வு குர் ஆனில் இல்லாத நிலையில்தான் என்கிறது.

சுய அபிப்பராயத்தின் அடிப்படையில் தீர்ப்பளிப்பது (குர்ஆன், சுன்னாவில் இல்லையென்றால்) என்பது அனைத்து அறிஞர்களிடமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரியான வழிமுறையாகும். ஆகவே தான் குர்ஆன், சுன்னாவில் தகவல் கிடைக்கப்பெற்றால் சுய அபிப்ராய கருத்துகள் நிராகரிக்கப்படும் என்று விதி உள்ளது. ஆனால் இந்த நிலைபாட்டை சுன்னாவிற்கு ஏற்படுத்துவது சரியாகாது. ஏனெனில் சுன்னா குர்ஆன் வசனங்களுக்குத் தீர்ப்பாகவும் அதற்குத் தெளிவுரையாகவும் இருக்கிறது. ஆகவே தான் குர்ஆனில் ஒன்றைக்



குறித்த விபரம் இருந்தாலும் அது தொடர்பாக சுன்னாவில் என்ன உள்ளது என்பதை ஆய்வு செய்வது கட்டாயமாகும். எனவே குர்ஆனோடு சுன்னாவிற்கு இருக்கும் தொடர்பு, சுன்னாவோடு சுய அபிப்ராயத்திற்கு இருக்கும் தொடர்பைப் போன்றதல்ல. மாறாக, குர்அன் சுன்னா இவ்விரண்டையும் கண்டிப்பாக ஒரே மூலமாகப் பார்க்கவேண்டும். இவற்றிற்கிடையே ஒரு போதும் பாகுபாடு காட்டவே கூடாது. இதனையே நபி(S) அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக நான் குர்ஆனும் அதைப் போன்றதும் சேர்த்தே வழங்கப்பட்டுள்ளேன். (அதாவது சுன்னா). மற்றொரு அறிவிப்பில் கூறினார்கள், (கவ்ஸர்) தடாகத்தில் என்னிடம் வரும் வரை (இவை) இரண்டும் பிரியவே பிரியாது.

முஆத்(RA) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள ஹதீஸ் ஆதாரமாக கொள்ளத் தக்கதன்று. ஏனெனில் அது குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு இடையில் பிளவை ஏற்படுத்துகிறது. மேலும் இதுவரை நாம் பார்த்த தகவல்களின் அடிப்படையிலும் இது ஓர் அசத்தியமான செய்தி என்பதினை அறியலாம்.

இந்தக் கருத்தினையே நான் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்பினேன். இதில் நான் சரியான நிலையில் இருந்தால் அது அல்லாஹ்வின் அருளாகும், தவறிழைத்திருந்தால் அது என்னுடையதே. மேலும் அல்லாஹ் தடுமாற்றங்களிலிருந்தும், அவன் விரும்பாதவற்றிலிருந்தும் என்னையும், உங்களையும் பாதுகாக்க வேண்டிப் பிராத்திக்கின்றேன்.